**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW 2 (PW 2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 08.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.தமிழ்குடிமகன் | Father Name | : | திரு.குப்பன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சூளக்கரை கிராமத்தில் வசிக்கிறேன் . நான் PG/TRB க்கு படித்து வருகிறேன். நான் சம்பவ சமயத்திலும் நான் போட்டி தேர்வுக்காக படித்துக்கொண்டிருந்தேன். என் மனைவி பெயர் அன்பு நிலா , எனக்கு இரண்டு குழந்தைகள். என் மாமனார் பெயர் கேசவன். சம்பவ சமயத்தில் என் மாமனார் சூளகரை கிராமத்தில் குடியிருந்து வந்தார் . ஓலா கம்பெனியில் வாட்ச் மேன் வேலை செய்து வந்தார் . அவர் Day Shift and night shift பார்த்து வந்தார். அவர் Shift Duty மாறி மாறி வரும் . 20.10.2021 தேதி Evening 6.30 மணிக்கு சம்பவம் நடந்தது . என் மாமனார் கேசவன் என்னிடம் அவரை பஸ்டாப்பில் விட்டுவிட்டு வரும்படி சொன்னார்.

(2) டியூடி பார்ப்பதற்காக அன்றைய தினம் என்னை சூளக்கரை பஸ் டாப்பில் விடும்படி சென்னார் . அவரை மாலை 6.00–6.10 அளவில் என் மாமனார் வீட்டில் இருந்து அழைத்துக்கொண்டு போய் சூளக்கரை பஸ்டாப்பில் விட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன் . மாலை 6.20–6.25 மணியளவில் சூளக்கரை சேர்ந்த நபர் வந்து என் மாமனாரிடம் ஒரு

பையன் சண்டை போட்டு கொண்டு இருப்பதாகவும் , அந்த சண்டை சூளக்கரை பஸ்டாப் அருகே நடப்பதாகவும் செந்தமிழன் என்ற தம்பி வந்து என் வீட்டின் அருகே வந்து சொன்னார். அதன் பிறகு நானும் என் மனைவி உடன் வண்டி எடுத்துக்கொண்டு பஸ் டாப்பிற்கு போனேன் அப்போது தம்பிதுரை (எ) அறிவு என் மாமனாரை அடித்துக்கொண்டிருந்தார். அப்போது அந்த நபர் கையில் போடும் வளையத்தை வைத்துக்கொண்டு என் மாமனாரை அடித்துக்கொண்டிருந்தார். அந்த நபர் என் மாமனாரின் வலது கண்ணுக்கு கீழே வளையத்தை கொண்டு முகத்தில் அடித்துகொண்டு இருந்தார். அதன்பிறகு என் மாமனாரை கீழே தள்ளிவிட்டு அவர் மீது ஏறி நெஞ்சின் மீது அமர்ந்துக்கொண்டு அவர் வைத்திருந்து Ring –ஆல் நெஞ்சின் மீது அடித்துக்கொண்டியிருந்தார்.

(3) நாங்கள் பக்கம் வந்தபிறகு தம்பிதுரை ஓடிவிட்டார் . அந்த சமயத்தில் நிறைய பேர் அங்கு இருந்தார்கள் . கீழே என் மாமனார் விழுந்துகிடந்ததால் யார் யார் அங்கு இருந்தார்கள் என்பது கவனிக்கவில்லை. என் மனைவியுடன் உறவினார் கோவிந்தசாமி அங்கு வந்தார். அவர் சென்று கார் எடுத்து வந்து போச்சம்பள்ளி அரசு மருத்துவனைக்கு கொண்டுபோனோம் அங்கு செக் செய்துவிட்டு ஏற்கனவே என் மாமனார் இறந்துவிட்டார் என்று சொன்னார்கள் . இது சம்மந்தமாக என் மனைவி காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தார் . தற்போது ஆஜரில் இருக்கும் எதிரிதான் அன்றைய தினம் என் மாமனாரை அடித்த நபர் ஆவார் . இந்த் சம்பம் நடக்கும்போது மாலை 6.30 மணி இருக்கும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(4) தினமும் என் மாமனாரை நான் தான் பஸ் டாப்பில் விடுவேனா என்ற சொன்னால் Dailyum விட மாட்டேன். நான் என் மாமனாரை அழைத்துச்சென்ற போது அவர் மது போதையில் இருந்தாரா என்று சொன்னால் அவ்வாறு ஏதுமில்லை. என் மாமனார் வண்டியில் வரும்போது இருபக்கங்களிலும் கால் போட்டு தான் உட்கார்ந்துக்கொண்டு வருவார். என் வண்டியில் வரும்போது என் மாமனார் அதிக போதையில் இருந்தார் என்றும் அவருக்கு BP அதிகமாக இருந்தது என்றும் அதனால் வண்டியில் இருந்து அவராகவே தவறி விழுந்து அதனால் அடிப்பட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் அது தவறு . எதிரியை நான் சுமார் 25 மீட்டரில் இருந்து பார்க்கும்போது அவர் ஓடிவிட்டார். அவ்வாறு எதிரி ஓடிவிட்டதால் எதனால் என் மாமனார் எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் ஆஸ்பிட்டலுக்கு போன பிறகு மருத்துவர் சொன்ன போது எப்படி இறந்தார் என்பது தெரிந்துக்கொண்டேன். இந்த சம்பவத்திற்கு முன்பாக எதிரி யார் என்று தெரியுமா என்று சொன்னால் ஊருக்கு வரும்போது அவரை பார்த்திருக்கிகறேன் ஆனால் அவரிடம் பேசியது கிடையாது.

(5) சம்பவத்திற்கு முன்பிருந்து எத்தனை வருடம் முன்பாக அவரை தெரியும் என்று சொன்னால் சுமார் 4-5 வருடங்களுக்கு முன்பு இருந்து தெரியும். அவ்வாறு 4-5 வருடங்களுக்கு முன்பு அவரை தெரியும் சொல்லும் பட்சத்தில் அவர் கையில் ஏதேனும் அணிந்திருந்தாரா என்று சொன்னால் அவர் அணிந்திருந்ததை நான் பார்க்கவில்லை. எதிரிக்கு கையில் வளையம் போடும் பழக்கம் இல்லை என்று சொன்னால் நான் பார்க்கும்போது கையில்

வளையம் வைத்திருந்தார் .தற்போது காண்பிக்கப்படும் வளையம் புதியதா , பழையதா என்று சொன்னால் புதியது தான் . இந்த **MO.1** வளையத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் இந்த வளையம் கொண்டு தான் எதிரி அன்றைய தினம் அடித்தார் . அந்த வளையம் அன்றைய தினம் உபயோகப்பட்டியிருந்தால் அது பழையதாக தான் இருந்திருக்கும் என்றும் , புதியதாக தோன்றது என்றால் அது சரியல்ல . அனைத்து Departmental Store லும் இது போன்ற வளையங்கள் விற்கப்படுகிறது என்றால் சரிதான் . வண்டியில் போகும்போது மது போதையாலும் , இரத்த கொதிப்பாலும் கீழே விழுந்து அதனால் காயம் ஏற்பட்டு பின்னர் மாரடைப்பு ஏற்பட்டு என் மாமனார் இறந்துவிட்டார் என்றால் அது தவறு . முதல் விசாரணையில் சொன்னது போன்று எதிரி என் மாமனார் நெஞ்சின் மீது வளைத்தை கொண்டு தாக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல . அவர் தாக்கியதை நான் பார்த்தேன்.

**(6)** என் மாமனார் தன்னிச்சையாக கீழே வண்டியில் இருந்து ஏற்பட்ட காயத்தால் இறப்பு ஏற்பட்டதால் எனக்கு என் மனைவிக்கும் ஏதாவது பிரச்சனை ஏற்படும் என்ற காரணத்திற்காக என் மாமனார் குடும்பத்திற்கும் , எதிரியின் மாமனார் குடுமபத்திற்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு நான் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு . இறந்துபோனவர் என் மாமனார் என்பதால் அவர் குடும்பத்திற்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

VASUDEVAN DAMODARAN

Additional District Judge

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 08.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி . அன்பு நிலா | Husband's Name | : | திரு.தமிழ்குடிமகன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused presnet.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சூளகரையில் குடியிருக்கிறேன் . என் கணவர் பெயர் தமிழ்குடிமகன், எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் , என் அப்பா பெயர் கேசவன், என் அப்பாவிக்கு இரண்டு ஆண் பிள்ளை , ஒரு பெண் பிள்ளை , பெரிய தம்பி பெயர் கே . ராஜசேகர், சின்ன தம்பி பெயர் கே . ராஜ்குமார். என் அப்பா ஓலா கம்பெனியில் வாட்ச் மேனாக வேலை செய்து வந்தார் . 20.10.2021 தேதி என் அப்பாவை என் கணவர் சூளக்கரை பஸ் டாப்பில் மாலை 6.00 மணிக்கு விட்டுவிட்டு வந்தார் . எங்கள் ஊரை சேர்ந்த செந்தமிழன் என்பவர் நான் வீட்டில் இருக்கும்போது அக்கா என்ன பண்ணிக்கொண்டியிருக்கிறா என்றும், என் அப்பாவிடம் பஸ்டாப்பில் ஒருவர் தகராறு செய்துக்கொண்டு இருப்பதாகவும் கூறினார்.

(2) அவ்வாறு சொல்லும் போது மணி 6.15 இருக்கும். அந்த தகவல் கேட்ட உடன் நான், என் வீட்டுக்காரர், கோவிந்தராஜ் என்ற அண்ணாவும் சூளகரை பஸ் டாப் போனோம். அப்போது தம்பிதுரை (எ) அறிவு எங்கள் ஊரை

சேர்ந்த பெண்னை கட்டிக்கொண்டவர் என் அப்பாவிடம் சண்டை போட்டுக்கொண்டியிருந்தார். என் அப்பாவிடம் அறிவு பீடி கேட்டுள்ளார் . வந்துபோகும் பெண்களை அசிங்கமாக திட்டிக்கொண்டு இருந்துள்ளார் . அப்பொழுது என் அப்பா ஏன் வந்து போகும் நபரிடம் சண்டை போட்டு கொண்டு இருக்கிறார் என்று கேட்டார் . அப்போது என் அப்பா உன் வயசு என்ன என் வயசு என்ன என்று வாக்குவாதம் ஏற்பட்டது . நாங்கள் போனபோது அறிவு கையில் வளையம் போட்டியிருந்தார் அந்த வளையத்தை கழற்றி ஆக்ரோசமாக வலது கண்ணுக்கு கீழே அடித்தார்.

(3) அவ்வாறு அடித்துவிட்டு என் அப்பாவை கீழே தள்ளி அவர் நெஞ்சின் மீது ஏறி உட்கார்ந்துக்கொண்டு நெஞ்சின் மீது கையால் வைத்திருந்த வளையத்தை கொண்டு அடித்துக்கொண்டியிருந்தார். நாங்கள் கூச்சல் போட்டு சத்தம் போட்டோம் , நிறைய ஆட்கள் வந்தார்கள் என் அப்பா மயக்கமாகிவிட்டார். என் அப்பா மயக்கமாகிவிட்ட காரணத்தினால் கோவிந்தராஜ் ஒரு கார் எடுத்து வந்து என் அப்பாவை போச்சம்பள்ளி ஜி.எச் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் , நானும் என் வீட்டுக்காரரும் மருத்துவமனைக்கு போய் இருந்தோம் . சண்டை நடக்கும் போது அண்ணாமலை , ஜெயகுமார், தனபால் ஆகியோரும் அந்த இடத்தில் இருந்தார்கள் , அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் . டாக்டர் Test செய்துபார்த்துவிட்டு அப்பா உயிருடன் இல்லை என்று சென்னார் அப்போது நேரம் இரவு 7.00 மணிக்கு மேல் இருக்கும். இது சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன். தற்போது காண்பிக்கப்படும் புகார் நான் எழுதிக்கொடுத்த புகார் தான் . அந்த புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார்

**அ.த.சா.ஆ.1** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சில்வர் கலர் வளையம் தான் அறிவு கையில் வைத்திருந்தார். அந்த சில்வர் கலர் வளையம் **Mo.1** ஆகும். ஆஜரில் இருக்கும் எதிரி தம்பிதுரை (எ) அறிவு தான் அன்றைய தினம் என் அப்பாவை தாக்கிய நபர் ஆவார் . போலீசார் என்னை சம்பவம் நடந்த அன்றைய தினமே விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

**(4)** நான் வேலைக்கு ஏதும் போகவில்லை வீட்டில் தான் இருந்து வருகிறேன். 2021ல் வருடமும் நான் வேலைக்கு ஏதும் போகவில்லை , வீட்டில் தான் இருந்தேன் . என் கணவர் அந்த சமயத்தில் Exam–க்காக படித்துக்கொண்டியிருந்தார். சூளக்கரை பஸ்டாப்பில் இருந்து எங்கள் வீடு அரை கிலோ மீட்டருக்கு சற்று குறைவாகதான் இருக்கும் . தம்பிதுரையின் மாமனார் எனக்கு சம்பவத்திற்கு முன்பாக தெரியும் என்றால் சரிதான் . ஆனால் அவர் பெயர் தெரியாது . எங்களுக்கு 1 ஏக்கரா நிலம் இருக்கிறது. எங்கள் நிலம் எங்கள் வீட்டில் இருந்து சுமார் 2 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. தம்பிதுரையின் மாமனார் எங்கள் நிலத்திற்கு அருகாமையில் தான் குடியிருக்கிறார் என்று சொன்னால் அது தவறு . தம்பிதுரையின் மாமனாருக்கும் எங்களும் முன் விரோதம் இருந்தது என்று சொன்னால் அது சரியல்ல. என் அப்பாவிற்கு எப்பொழுதாவது குடிப்பார் அவ்வாறு குடித்தால் வீட்டில் வைத்து தான் குடிப்பார்.

**(5)** குடித்தால் வீட்டிலே படித்துக்கொள்வார் . 20.10.2021 தேதி என் அப்பா குடித்திருந்தாரா என்று சொன்னால் அவர் குடிக்கவில்லை , அவர் கம்பெனிக்கு வேலைக்கு போவதால் அவர் எப்படி குடித்திருப்பார். என்

அப்பாவிற்கு BP உள்ளது என்றால் சரிதான். அவருக்கு அந்த சமயத்தில் BP – 140 இருந்தது. என் வீட்டுக்காரர் Splender வண்டி வைத்துள்ளார். அந்த Splender வண்டியில் தான் என் அப்பாவை என் கணவர் விட்டுவிட்டு வருவார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என் அப்பாவிற்கு வயது 51–52 இருக்கும். என் அப்பா வண்டியில் போகும்போது ஒரே பக்கமாக இரண்டு கால்களை போட்டு உட்காரமாட்டார் , இரண்டு பக்கங்களிலும் கால்கள் போட்டு உட்கார்ந்துக்கொண்டு வருவார். அந்த சமயத்தில் என் அப்பா மிக அதிகமாக மது அருந்திருந்தார் என்று சொன்னால் அது தவறு . என் கணவர் என் அப்பாவை இருசக்கர வாகனத்தில் அழைத்துச்செல்லும் போது BP அதிகமானதாலும், போதை அதிகமானதாலும் வண்டியில் இருந்து என் அப்பாவே தன்னிச்சையாக கீழே விழுந்துவிட்டார் என்றால் அது தவறு . அவ்வாறு வண்டியில் இருந்து கீழே விழுந்ததால் தான் என் அப்பாவிற்கு கண்ணுக்கு கீழ் அடிப்பட்டது என்று சொன்னால் அது தவறு . அறிவு அடித்ததால் அந்த காயம் என் அப்பாவிற்கு ஏற்பட்டது . அவ்வாறு என் அப்பா வண்டியில் இருந்து கீழே விழுந்ததால் BP அதிகமாகி மாரடைப்பு ஏற்பட்டு என் அப்பா இறந்துவிட்டார் என்று சொன்னால் அது சரியல்ல.

**(6)** என் அப்பாவை என் வீட்டுகாரர் அழைத்துச்சென்று விட்டுவிட்டு வந்த 10 நிமிடத்திற்கு எல்லாம் இந்த சம்பவம் நடந்தது . இந்த சம்பவம் நடக்கும் முன்பாக தம்பிதுரை (எ) அறிவு வளையம் அணிந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேனா என்று சொன்னால் பார்த்துள்ளேன் . சம்பவம் நடப்பதற்கு சமிபத்திற்கு முன்பாக அவர் வளையம் அணிந்திருந்துள்ளதை நான் பார்த்துள்ளேன். அவர் வைத்திருந்தது புதிய வளையமா , பழைய வளைமா

என்பதை நான் பார்க்கவில்லை. அது சில்வர் கலர் வளையம் என்று மட்டும் தான் தெரியும். அவ்வாறு அந்த வளையத்தை நான் பார்க்கும்போது இரத்தம் இருந்ததா என்று சொன்னால் இரத்தம் இருந்தது . பொதுவாக அந்த வளையமானது அனைத்து பேன்சி ஸ்டோர்களில் கிடைக்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது . தற்போது காண்பிக்கப்படும் **Mo.1** வளையம் புதியதாக உள்ளது என்றும் அது உபயோகப்படுத்தியதற்கான அடையாளம் ஏதும இல்லை என்று சொன்னால் அந்த வளையமானது அடுத்த நாள் தான் எதிரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது அந்த வளையத்தை அதற்கு முன்பு எதிரி கழுவி இருக்கலாம். மேற்படி MO.1 வளையமானது ஒரு ஆணோ , பெண்னோ உபயோகப்படுத்தப்படாத வளையம் என்றால் அது தவறு உபயோப்படுத்தப்பட்டுள்ளது. என் அப்பாவை அடித்த போது எதிரி என்ன கலர் Dress அணிந்திருந்தார் என்று சொன்னால் ஏதோ கட்டம் போட்ட Dress போட்டியிருந்தார், என்ன கலர் என்பது ஞாபகமில்லை . அவர் ஷர்ட் அணிந்திருந்தாரா அல்லது பனியன் அணிந்திருந்தாரா என்று சொன்னால் பனியன் அணிந்திருக்க வாய்ப்பு இல்லை , ஷர்ட் தான் அணிந்திருந்தார் . இடுப்பில் பேன்டோ , டிராயரோ அணிந்திருந்தார்.

**(7)** நான் காவல் நிலையத்திற்கு 20.10.2021 தேதி இரவு 9.30–10.00 மணிக்கு போய் இருந்தேன் . அங்கு பத்மாவதி மேடம் இருந்தார்கள் , கண்ணன் என்ற போலீசாரும் இருந்தார் . அவரிடம் போய் நான் அப்பா இறந்துவிட்டதாக தகவல் சொன்னேன் என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்பாகவே காவல் நிலையத்திற்கு தகவல் போய்விட்டது . காவல் நிலையத்தில் அன்றைய தினம் சுமார் அரைமணி நேரம் இருந்தேன். அந்த

அரைமணி நேரத்தில் நான் புகார் எழுதிக்கொடுத்தேன் . என்ன நடந்தது என்று கேட்டார்கள் நான் சொன்னேன் . இன்ஸ்பெக்டர் பத்மாவதி மேடம் இருந்தார்கள் அவரிடம் சொன்னேன் , கண்ணன் போலீசாரிடமும் சொன்னேன். அவர்கள் முன்னிலையில் நான் புகார் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான் . எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் இன்ஸ்பெக்டரும், கண்ணன் போலீசாரும் சொல்லிக்கொடுத்து அதன்பேரில் எதிரிமீது புகார் கொடுத்தேன் என்று சொன்னால் அது தவறு . நான் எழுதிக்கொடுத்த புகாரின் பேப்பரானது யார் என்னிடம் கொடுத்தார்கள் என்று சொன்னால் போலீசார் தான் கொடுத்தார்கள் . சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்திலும் எந்த புகாரும் நான் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும் , என் வீட்டுகாரர் குடி போதையில் இருந்த என் அப்பாவை ஏற்றிச்சொல்லும்போது கீழே விழுந்ததால் என் கணவர் மீது வழக்கு வரும் என்ற காரணத்திற்காக அதனை மறைத்து எதிரி தாக்கி என் அப்பா இறந்துவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் அது சரியல்ல .

(8) நான் சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து எதிரியின் மீது நான் தவறுதலாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் அது சரியல்ல. அதேபோல் நான் சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றால் அது தவறு . சம்பவத்தில் எதிரியை நான் பார்க்காத காரணத்தினால் தான் சம்பவத்தின் போது எதிரி என்ன உடை அணிந்திருந்தார் என்ற விவரத்தை என்னால் சொல்ல முடியவில்லை என்றால் அது தவறு. ஹாஸ்பிட்டல் போனபோது மருத்துவர் யார் உடன்

வந்தார்கள் என்று கேடார்கள் என் பெயரை சொன்னேன் டாக்டர் என் பெயரை எழுதிக்கொண்டார் . நான் சொன்ன நேரத்தில் என் அப்பாவை நானும் , என் கணவரும் , கோவிந்தராஜ் என்பவரும் மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றும் , என் கணவர் மீது வழக்கு வந்துவிடும் என்ற காரணத்திற்காக நான் மருத்துவமனைக்கு போகவில்லை என்று சொன்னால் அது தவறு. என் அப்பா கீழே விழுந்துகிடந்த இடத்தில் இருந்த நபர்கள் தான் என் அப்பாவை மருத்துவனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள் என்று சொன்னால் அது தவறு . நாங்கள் தான் மருத்துவனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். என் அப்பாவின் நெஞ்சின் மீது எதிரி ஏறி உட்கார்ந்துக்கொண்டு அவர் வைத்திருந்த வளையத்தில் நெஞ்சின் மீது அடித்தார் என்ற விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்று சொன்னால் சொல்லியிருக்கிறேன் . சம்பவத்தை அண்ணாமலை, கோவிந்தராஜ், ஜெயகுமார், தனபால் ஆகியோர் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு . என் அப்பா அதிக போதை காரணமாகவும் , BP அதிகமான காரணத்தினாலும் அவரகவே வண்டியில் இருந்து கீழே விழுந்து என் அப்பாவிற்கு காயம்பட்டு மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

(9) அறிவு அடித்ததால் தான் என் அப்பா இறந்துவிட்டார் . என் அப்பா இறப்பிற்கும் இந்த எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது தவறு. இறந்தவர் என் அப்பா என்பதாலும் , என் கணவரை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டியும் நான் எதிரி சம்பவத்தில் ஈடுப்பட்டதாக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் அது தவறு. என் அப்பாவிற்கும்

எதிரி மாமனார் குடும்பத்திற்கு உள்ள முன்விரோதம் காரணமாக எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN